**2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திருமதி. ஆர்.எல். பிரியதர்ஷினி, பி.ஏ., பி.எல்.,**
2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 09 ம் நாள் வியாழக்கிழமை

<u>I.A.No.3/2026 in O.S.No.471/2023</u>

1) பிளாரன்ஸ்
2) அந்தோணி ராஜம்மாள்
3) லூர்துசாமி
4) அருள்ராஜ்
5) சகாய ஸ்டெல்லா
6) சார்லஸ் (எ) ஆரோன்குமார்
7) ராசையா
8) அருமைநாயகம்
9) கஸ்தூரி சுந்தரி (எ) கௌரி ...மனுதாரர்கள்/வாதிகள்

/Vs./

1) ஈசாக்கு
2) செல்லபாண்டி
3) அந்தோணி ராஜ்
4) மாடசாமி
5) மா.முருகேசன்
6) மரியதாஸ்
7) முத்துலட்சுமி
8) கிராம நிர்வாக அலுவலர்
சிவந்திபட்டி
9) தாசில்தார், பாளையங்கோட்டை தாலுகா,
10) தமிழ்நாடு அரசு அதன் மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருநெல்வேலி.

...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக 30.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பேச்சிமுத்து அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.மணிகண்டன் அவர்கள் முன்னிலையாகியும், 8 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.R.சங்கர் அவர்கள் முன்னிலையாகி எதிருரை தாக்கல் செய்யாத நிலையிலும் இருதரப்பு வாதங்களையும் கேட்டு, ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்று மனுதாரர்கள் பக்கம் குறியீடு செய்ய உத்தரவிட வேண்டி உரிமையியல் விசாரணை முறை சட்டம் கட்டளை 7 விதி 14 (3)ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டது.

2) **மனுவின் சுருக்கம்**

மனுதாரர்கள் தரப்பில், எதிர்மனுதாரர்கள் சொத்துக்களின் எல்கைகள் மற்றும் நிலவியல் அமைப்புகளை பிரச்சினை செய்து வருகிறார்கள். அந்த வகையில் 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள் பிராது தபசில் சொத்து எல்கைகள், 9 மற்றும் 10 எதிர்மனுதாரர்கள் தமிழ்நாடு அரசின் சர்வே ஸ்கீம், ஜீ.ஒ படியான் நிலவியல் மேப் மூலம் நிலவியல், வண்டி தடம், சர்வே எண்களின் எல்கைகள் போன்றவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து விளக்கம் கூறுவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதால் மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரையின் சுருக்கம்</u>**

மனுதாரர்களின் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்ட ஆவணமானது மனுதாரர் தரப்பு சாட்சியத்தில் ஏன் குறிப்பிடவில்லை என்பது பற்றி மனுவில் விவராக குறிப்பிடவில்லை. மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணமானது மனுதாரர்கள் வழக்கு தாக்கல் செய்த சமயத்திலேயே Online ல் உள்ள ஆவணமாகும். மனுதாரர்கள் அசல் வழக்கு தாக்கல் செய்த சமயத்திலேயே தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு இரண்டாவது சாட்சிக்கும், இந்த ஆவணத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லாதபோது 2 வது சாட்சி தரப்பில் இந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. எனவே மனுதாரர்களின் மனுவை எதிர்மனுதாரர்கள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**<u>தீர்வு</u>**

4) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

5) இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

6) பிராது தபசில் 1, 2 அயிட்ட சொத்துக்களில் அளவுகள் படியும், அளந்து நிர்ணயம் செய்து தர வேண்டியும், மேற்படி எல்கைகள் அளந்து நிர்ணயம் செய்த பின்பு பிரதிவாதிகளோ அவர்களது ஏஜெண்டுகளோ, வேலையாட்களோ, வகையாட்களோ இடைஞ்சல் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) அசல் வழக்கானது வாதி தரப்பில் கூடுதல் சாட்சி விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ள நிலையில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் வழக்கு விசாரணையிலும் எதிர்வழக்குரையிலும்

பிரதிவாதிகளின் எல்கைகளையும் நிலவியல் அமைப்புகளையும் பிரச்சினை செய்வதால் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் தற்போது தாக்கல் செய்யப்படுவதாக மனுதாரர் தரப்பில் கூறப்பட்ட காரணம் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது.

8) எனவே இம்மனுவை அனுமதிப்பதால் மட்டுமே மனுதாரர் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நிரூபித்ததாக கூற முடியாது. இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நிரூபிக்கும் பொறுப்பு மனுதாரரையே சாரும். இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை குறியீடு செய்யும் போது எதிர்மனுதாரர்களுக்கு ஆட்சேபனை ஏதேனும் இருப்பினும் அந்த ஆட்சேபனையை இந்நீதிமன்றம் தீர்மானிக்க முடியும் என்பதாலும் ஆவணங்களின் தொடர்புடைமை மற்றும் அனுமதிக்கத்தக்கதா? என்பது குறித்து தீர்ப்பின் போது தீர்மானிக்க முடியும் என்பதாலும் எதிர்மனுதாரர்கள் மேற்படி ஆவணங்கள் குறித்து மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யலாம் என்பதாலும், இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் அசல் வழக்கானது வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வைக்கப்பட்டுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த மனு அனுமதிக்கப்பட்டால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்பதால் இம்மனுவை அனுமதித்து உத்தரவிட இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9) இறுதியாக**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 09 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

orders uploaded on 10.07.2026
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.07.10 10:49:42 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிபதி, திருநெல்வேலி

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் </u>- இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் </u>- இல்லை

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

orders uploaded on 10.07.2026
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.07.10 10:49:47 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

2 வது கூடுதல் மாவட்ட
உரிமையியல் நீதிமன்றம்,
திருநெல்வேலி

**I.A.No.3/2026 in O.S.No.471/2023**

சீரான – உத்தரவு

**நாள்–09.07.2026**